MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – II ISSUE – 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# பதினெண்கீழ்க்கணக்கில் கழுகினங்கள்(Falconiformes)

முனைவர் **ச.மீனாட்சி**,
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
meenakshis-tam@sfrcollege.edu.in

DOI 10.5281/zenodo.14912200

**Abstract :**

Since ancient times, thousands of living beings have lived on this earth. Zoologists claim that man evolved from animals. The ancient Tamils were very interested in the nature around them. Animals began to play an essential role in the lives of people who lived in harmony with nature. Moreover, the ancient Tamils were amazed to see creatures that adapted themselves to the environment in which they lived. The four fixed values of virtue, wealth, pleasure and home are the focus of the eighty-nine. It is no exaggeration to say that these literatures emphasize virtue and also record the lives of animals in a special way. In this way, this research article aims to reveal the evidence about the animals recorded in the Pthinen keelkkanakku noolgal.

**Key Words :** Ancient Tamil - Moral literature - Birds - Zoology

## முன்னுரை

பண்டைக்காலம் முதலாக இப்பூவுலகில் பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. விலங்குகளிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியினை விலங்கியலாளர் பறைசாற்றுகின்றனர். பண்டைத் தமிழர்கள் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையிடத்து மிகுந்த ஈடுபாட்டினைக் கொண்டிருந்தனர். இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்களின் வாழ்வில் புள்ளினங்கள் இன்றியமையா இடத்தினைப் பெறத் தொடங்கின. மேலும், தாங்கள் வாழ்கின்ற சூழலுக்கு ஏற்ப தங்களைத் தகவமைத்துக் கொள்கின்ற உயிரினங்களைக் கண்டு பண்டைத் தமிழன் வியப்பிற்குள்ளானான். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப்பொருட்களைப் பதினெண்கீழ்க்கணக்கு மையமாகக் கொண்டுள்ளன. இவ்விலக்கியங்கள் அறத்தை வலியுறுத்துவதோடு புள்ளினங்களின் வாழ்வியலையும் சிறப்புற பதிவுசெய்துள்ளன என்று கூறின் மிகையாகாது. அவ்வகையில் பதினெண்கீழ்க்கணக்கில் பதிவாகியுள்ள கழுகினங்களைப் பற்றி சான்றாதாரங்கள் வழி வெளிக்கொணர்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## கழுகினங்கள் (Falconiformes)

பறவை என்னும் பொதுவான பொருளைக் குறிக்கும் சொல்லே புள் என்பதாகும். பறவையினம் மற்றும் பறவைகளின் கூட்டமே புள்ளினம் என்று அழைக்கப்படுகின்றது. ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’ என்ற அடிகளுக்கு இலக்கணமாகத் திகழ்வது புள்ளினங்களே. தமிழ்நாட்டில் விலங்குகளை விட பறவையினங்கள் மிகுதியாகக் காணப்படுகினறன. கழுகினத்தை ஆங்கிலத்தில் ஃபால்கோணி ஃபார்மஸ் (Falconiformes) என்பர். இவ்வின வரிசையில் பகலில் இரைதேடும்


http://Creativecommons.org//license/by/4.0/.

கொன்றுண்ணிப் பறவைகளாகச் சுமார் 290 கழுகினங்கள் இடம்பெற்றுள்ளன. இக்கொன்றுண்ணிப் பறவைகளை நான்கு குடும்பங்களாகப் பிரிப்பர்.

அவையாவன,

"கழுகுக்குடும்பம்(Accipitridae)
மீன்கழுகுக்குடும்பம்(Osprey)
வல்லூறுக்குடும்பம்(Falconidae)
நெடுங்கால்கழுகுக்குடும்பம்(Sagittariidae)"[1] என்பனவாகும்.

இக்கொன்றுண்ணிப் பறவைகள் எலி, முயல் போன்ற பாலூட்டி விலங்குகளையும் கோழி, புறா போன்ற பிற பறவைகளையும் கொன்று தனக்கு இரையாக்குகின்றன. இப்பறவைகள் தன் இரையினைக் கூரிய நுனியுடைய அலகால் கிழித்து உண்ணவல்லன. பொதுவாகக் கொன்றுண்ணிப் பறவைகளில் பெண்பறவைகள் ஆண்பறவைகளைக் காட்டிலும் பெரியதாக இருக்கும். பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெற்றுள்ள கழுகினங்களைக் காரல்லின்னேயஸ் வகுத்த அறிவியல் கூற்றான 'வரிசை' (order) என்ற முறைகளில் பாகுபடுத்தலாம்.

**கழுகு**

உலகில் வேட்டையாடி இரைதேடி உண்ணும் பறவைகளுள் கழுகு முக்கியத்துவம் பெறுகின்றன. கழுகு என்பதற்கு 'கூர்மை' என்ற பொருளுண்டு. கழுகு என்ற சொல்லிற்கு ஞா.தேவநேயன் பின்வருமாறு, "குழு - கழு - கழுகு திரண்ட பறவை என்றும் மிக உயரப் பறப்பவற்றுள் மிகப் பருத்த பறவையினம் என்றும் சுட்டுவர்."[2] பொருள் உரைக்கின்றார். பறவை நூலார் கழுகினை "அக்யூலாராபாக்ஸ்"(Aguilarapax) என்று அழைப்பர். கழுகு மிகப்பெரிய வலுவான கொன்றுண்ணிப் பறவையாகும். எழால், கழுகு, கங்கு, கங்கம், கூளி, பருந்து, பணவை, பாறு, பூகம், வல்லூறு போன்றன கழுகின் இனங்களாகும். இறந்த விலங்குகளையும், கழிவுப்பொருட்களையும் உண்பிக்கும். இறந்தவர்களின் உடலைத் தின்னும் கழுகுகளைச் சமணமுனிவர் பின்வருமாறு,

**"…….மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச் சாகாடச் சிற்றுழி"**

**(இளவழகனார்,நாலடியார்,பா.அடிகள்.48:2-4)**

என்று குறிப்பிடுகின்றார். வலிமையான ஆண், பெண் பறவைகள் இறந்த உடலைப் புரட்டிக் கொத்தித் தின்னும் கழுகின் இயல்பினைக் குறிப்பிடுகின்றன. கழுகும், பருந்தும் ஒரே இனத்தைச் சார்ந்த பறவை என்பதை,

**"….பருந்து கழுகொடு வம்பலர்ப் பார்த்தாண்
டிருந்துறங்கிவீயு இடம்"**

**(அ.நடராசபிள்ளை,தி.மா.நூற்,பா.அடிகள்.91:3-4)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. கள்வர்கள் வாழும் பாலை நில வழியில் உடலில் புள்ளிகளை உடைய கழுகும், பருந்தும் காணப்படுகின்றன. இவ்விரு பறவைகளும் ஏறத்தாழ ஒரே


http://Creativecommons.org//license/by/4.0/.

பழக்கவழக்கத்தினை உடைய பறவையாகும். உலகில் துப்புரவு பணியாளனாகச் செயல்படுவதால் சூழல் மாசினைத் தடுப்பதில் தலையாய இடத்தினைப் பெறுகின்றது. சுற்றுச்சூழல் பாதுகாப்பின் மேம்பாட்டினைப் பேசுகின்ற நாம் தீவிர நாகரீக வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தினால் மட்டுமே பறவைகளைக் காக்க இயலும்.

**எழால்**

எழால் என்பது 'வல்லூறு' என்னும் கழுகு வகையைச் சார்ந்த பறவையாகும். இதன் தலைமயிர் கருத்து இருக்கும். இதன் வாலில் மூன்று அல்லது நான்கு குறுக்குப்பட்டைகள் காணப்படுகின்றது. மக்கள் நடமாட்டம் இல்லாத பாழ்மன்றங்களையே தனது வாழிடமாகத் தேர்ந்தெடுக்கின்றது. நிழலில்லாத வெட்டவெளியிலே பறந்து இரைதேடும் தன்மை கொண்டது. ஊன் உண்ணியைச் சார்ந்த பறவையாகும். வல்லூறு என்பது உருவில் சற்று சிறிய கழுகினம் ஆகும். எகிப்து நாட்டில் இப்பறவையினை அரசின் அடையாளச் சின்னமாகக் கொண்டுள்ளனர்.

இன்று எழாலினை 'பெரியவல்லூறு' என்ற பெயரால் பறவையியலாளர் அழைக்கின்றனர். இதனை ஒத்த தோற்றம் கொண்ட உருவில் சிறிய எழாலை 'சிறிய வல்லூறு' என்கின்றனர். சின்ன வல்லூறை 'சிற்றெழால்' என்று அழைக்கின்றனர். இவ்வல்லூறு காடை முதலிய சிறுபறவைகளை அடித்துத் தின்னும் சக்தியுடையது. அடர்ந்த மரங்களில் அமர்ந்து கொண்டு ஓணான், பல்லி, வெட்டுக்கிளி மற்றும் வெள்ளெலி போன்றன வருகின்றதா என்று நோட்டம் இடும். சிற்றெழால் புறாவுடன் சீறும் தன்மையினைத் திணைமாலை நூற்றைம்பது பின்வருமாறு,

**"சிறுபுன் புறவொடு சிற்றெழால்சீறு**
**நெறியரு நீள்சுரத்தல் குவர் கொறோழீ!"**

**(அ.நடராசபிள்ளை,தி.மா.நூற்,பா.அடிகள்.15:1-2)**

என்ற பாடலடியில் குறிப்பிடுகின்றது. இப்பறவைக்குப் புறாவினைப் பிடித்துத் திண்பது எளிதல்ல. இதனையறிந்த புலவர் சிற்றெழால் புறாவுடன் சீறுகின்ற தன்மையினை இலக்கியங்களில் பதிவு செய்துள்ளார்.

**எருவை**

பிணம் தின்னும் கழுகு வகைகளில் ஒன்றே எருவை. பிணத்தை மட்டுமே உணவாகக் கொள்ளும் கழுகுகளில் நான்கு வகை கழுகினங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றுள் சிவந்ததலையுடைய பிணந்தின்னிக் கழுகு எருவை என்றும் கரிய நிறத்தலையுடைய பிணந்தின்னிக் கழுகு பாறு என்றும் அழைக்கப்படுகின்றது. எருவை எரு என்பதன் அடியாகப் பிறந்த சொல். எரு என்பதற்குச் சிவந்தநிறம் என்று பொருள். "எருமணம்= செங்குவளைமலர்"[3] என்று வெற்றித் தமிழ்அகராதி பொருள் கொள்கிறது. எருவை என்பதற்கு 'சிவந்த நிறமுடைய பறவை' என்பது பொருளாகும். எருவையினைப் பறவை நூலார் 'Targos calvus' என்று அழைப்பர். எருவை பற்றி பி.எல்.சாமி, "தலையும் கழுத்தும் இறகுகள் இல்லாமல் வழுக்கையாய்ப் புதிதாக வெட்டப்பட்ட விலங்கின் இறைச்சியைப் போலக் காணப்படும். அதிலும் காது மிகமிகச் சிவப்பாகக் காணப்படும்."[4] என்பர். இலை போன்று தொங்கும் காதுகளைக் கொண்ட பறவையினமாகும். எருவை பிணத்தை


http://Creativecommons.org//license/by/4.0/.

மட்டுமே உணவாகக் கொள்ளும் இயல்புடையது. இப்பறவை வானிலிருந்து இறங்குவதைப் பார்த்தே காட்டில் பிணம் எங்கு கிடக்கின்றது என்பதனை அறிந்து கொள்ள முடியும். தன் ஆயுள்முழுவதும் பிணத்தை மட்டுமே உணவாகக் கொள்ளும் எருவையினை இலக்கியங்கள் பின்வருமாறு,

**“இருசிற கரீர்க்குப் பரப்பியெருவை,**
**குருதி பிணங்க வருந்தோற்ற......”**

**(ந.மு.வே,களவழிநாற்பது,பா.அடிகள்.**20:1-2)

**“தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்**
**போத்தறார் புல்லறிவினார்....”**

**(இளழகனார்,நாலடி,பா.அடிகள்.**351:3-4)

பதிவு செய்துள்ளன. இரு சிறகுகளையும் விரித்துப் பிணங்களைக் கொள்ளை கொள்கின்றன. மேலும், முதுமை அடைந்தாலும் தீத்தொழிலான பிணத்தையே உணவாகக் கொள்கின்றன என்று நாலடி விளக்குகின்றது. இப்பாடல்கள் எருவை பறவையினைப் பிணந்தின்னிக் கழுகாகவே உணர வைக்கின்றது. தற்காலத்தில் எருவை ‘பிணம்தின்னிக் கழுகு’ என்றே அழைக்கப்படுகின்றது. இக்கழுகு பெரும்பாலும் இலையுதிர்காடுகளிலும், அரைப்பாலையான குறுங்காடுகளிலும் காணப்படுகின்றன.

**பாறு**

பினந்தின்னும் கழுகினங்களில் எருவைக்கு அடுத்தது பாறு ஆகும். பாறு என்ற சொல்லிற்கு ‘உலர்த்தல், வற்றுதல்’ என்று நிகண்டுகள் பொருள் உரைக்கின்றன. உரையாசிரியர்கள் பாறு இனத்தினைப் பருந்து என்றும் கழுகு என்றும் சுட்டுகின்றனர். பாறு என்ற பிணந்தின்னிக் கழுகை ஆங்கிலத்தில் ‘The White Backed Vulture’ என்றும் பறவைநூலில் ‘Gyps benga lensis’ என்றும் குறிப்பிடுவர். உயர்மலைப் பகுதிகளில் வாழும் பெறும்பிணந்தின்னி வகையைச் சார்ந்த கழுகு வகைகளில் ஒன்றே பாறு. பறவைகளிலே பாறு இனப்பறவைகள் தான் அதிக உயரத்தில் பறக்கக்கூடிய பறவையாகும். மீன்களைத் தின்னவரும் பாறுவின் அதிவேகத்தைத் திணைமாலை நூற்றைம்பது பின்வருமாறு,

**“பாறுபுரவியாப் பல்களிறு நீள்திமிலாத்**
**தேறுதிரை பறையாப்புட் படையாத் தேறாத.....”**

**(அ.நடராசபிள்ளை,தி.மா.நூற்,பா.அடிகள்.**53:1-2)

குறிப்பிடுகின்றது. குதிரையின் வேகத்திற்கு ஈடாக வந்து மீன்களைக் கவரும் பாறுவின் அதிவேகத் தன்மையினைத் திணைமாலை நூற்றைம்பது பதிவு செய்துள்ளது.

வானத்தில் ஒரு பாறு பிணத்தைக் கண்டு கீழே இறங்கினால் ஒன்றன்பின் ஒன்றாக இவ்வினப்பறவைகள் பிணத்தைச் சுற்றி சேர்ந்து விடும். இவ்வாறு வானில் பறக்கும் பாறின் நிழலைக் கண்டு அஞ்சி தலைவனுடன் செல்வாளோ? என்பதனை,

**“ஏற்றிய வில்லினெயினர் கடுஞ்சுரம்**
**பாற்றினஞ் சேரப்படு நிழற்கண் டஞ்சிக்....”**

**(அ.நடராசபிள்ளை, திணைமொழிஐம்பது,பா.அடிகள்.**20:1-2)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இக்கழுகு சில குறிப்பிட்ட மரங்களில் பழக்கமாக உட்காரும் என்று பறவை நூலார் கூறுவர். இவரது கூற்றிற்கு ஏற்ப பாறு தங்கும் இடம் 'பாழிடமாகும்' என்று பாமர மக்கள் கருதுவர். இப்பறவைகள் தங்குகின்ற இடமான மரங்களில் நெடுங்காலம் எச்சமிட்டு வந்தால் அம்மரங்கள் மடிந்து போய்விடும். மாந்தோப்பு, தென்னந்தோப்பு, புதுக்காடுகள் ஆகியவற்றில் பாறு இனக் கழுகுகள் தங்கினால் அம்மரங்கள் அழிந்து விடுகின்றன.

**பருந்து**

பருந்தினங்களின் தலைவன் என்றழைக்கப்படும் சிறப்பினை உடையது பருந்து. இவை ஓர் ஊண்உண்ணியாகும். கருடன் பருந்து இனத்தைச் சேர்ந்த உயிரினமாகும். பகல் நேரங்களில் மட்டுமே காணப்படும். பருந்து என்பதற்கு, "பரந்து= மிக உயரப் பறக்கும் பறவையினம்."[5] என்பர் ஞா.தேநேயன். பருந்து உயரமாகவும் வேகமாகவும் பறக்கக் கூடியது. ஒரே நாளில் கிழக்கிலிருந்து மேற்குக்குச் செல்லும் தன்மை உடையது. இதனது கால்கள் மிகவும் வலுவாய்ந்தது. 'உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது' என்ற பழமொழி பருந்து மிக உயரமாகப் பறக்கும் தன்மை உடையது என்பதனைப் புலப்படுத்துகின்றது. பருந்தின் பார்வை கூரிய பார்வையாகும். எவ்வளவு உயரமாக இருந்தாலும் தன் இரையினைக் கண்டவுடன் கண்இ மைப்பதற்குள் வந்துவிடும் இயல்பினை உடையது. புலால் உணவு கிடைக்கும் இடங்களில் இப்பருந்துகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கும். பருந்து உணவு உண்ணும் முறையினைப் பழமொழிநானூறு பின்வருமாறு,

**"உரைத்தவர்நாவோபருந்தெறியாதென்று**
**சிலைத்தெழுந்துசெம்மாப்பவரே…"**

**(ம.இராசமாணிக்கம்,பழமொழிநானூறு,பா.அடிகள்.296:1-2)**

எடுத்தியம்புகின்றது. புலால் என்றால் விரையும் பருந்து கூட பிறரைத் தகாத வார்த்தைகளால் பேசிப் புண்படுத்திய நாக்கினை உண்ணாது என்ற செய்தியினைக் குறிப்பிடுகின்றது.

**செம்பருந்து**

பருந்து இனங்களுள் ஒன்றே செம்பருந்து. நீர்நிலை அருகில் மனிதர் வாழ்கின்ற இடங்களில் காணப்படுகின்ற பருந்தினைச் செம்பருந்து என்பர். உடல் செந்துருநிறத்திலும், தலை, கழுத்து, நெஞ்சு போன்றவை வெண்மை நிறத்திலும் காணப்படும். இதன் வால்பகுதி அரைவட்டமாய்ப் பனைவிசிறியைப் போல் இருக்கும். மூக்குக் கூர்மையாகவும் வாள்போல் வளைந்தும் வெள்ளை நிறத்தில் இருக்கும். கண்கள் சிவப்பாக இருக்கும். கால் நகங்கள் கத்திமுனை போல் மிகக்கூராகவும், வலுவாகவும் இருக்கும். இஃது வேட்டையாடுவது கால்களால் தான். இரையைக் கொத்திக் கிழிப்பதற்கே உரிய மூக்கும் பயன்படுகின்றது. இதனைக் கருடப்பருந்து, கிருஷ்ணப் பருந்து என்றும் வீட்டில் வளர்க்கும் கோழிக் குஞ்சுகளைத் தூக்கிச் செல்வதால் கள்ளப்பிராந்து என்றும் பாமரமக்கள் அழைப்பர். கழுகும், பருந்தும் ஒரே இனத்தைச் சார்ந்த பறவை என்பது அறிவியலாளர் கருத்து. இக்கருத்திற்கு ஏற்ப கழுகினங்களுள் ஒன்றான எருவையும் கருடனும் இடம்பெறும் பாங்கினை,

**"கைவாயிற் கொண்டெழுந்த செஞ்செவிப்புன் சேவ**
**லைவாய் வயநாகங் விசும்பு வருஞ்**


http://Creativecommons.org//license/by/4.0/.

செவ்வாயு வணத்திற் றோன்றும்....”

(ந.மு.வேங்கடசாமிநாட்டார்,களவழிநாற்பது,பா.அடிகள்.26:2-4)

என்ற பாடலடிகளால் அறியலாம். போர்களத்தில் துண்டாகிப் போனக் கையினைக் கழுகு இனங்களுள் ஒன்றான எருவை பறவை எடுத்துக் கொண்டு சென்றது. இக்காட்சி பருந்து இனங்களுள் ஒன்றான செம்பருந்து பாம்பினைக் கவ்விக் கொண்டு சென்றது போன்றுள்ளது என்று குறிப்பிடுவது கழுகும், பருந்தும் ஒரே இனத்தைச் சார்ந்த பறவை என்பதனை நம்மால் அறிய முடிகின்றது. செம்பருந்துகள் செத்தமீன்கள், நண்டுகள், சிறுபறவைகள், எலி, நீர்ப்பாம்பு ஆகியவற்றை உண்ணும். ஆற்றங்கரைகளிலும் கடலோரங்களிலும் சுற்றி இரை தேடுகின்ற மனிதர்களுடன் இணைந்து வாழ்பவை. உழவு வயலில் காணும் சிறியமீன் மற்றும் சிறுபறவைகளை வேட்டையாடுகின்ற தன்மையுடையது.

**முடிவுரை**

- புலவர்களின் எழுத்தாளுமை பழந்தமிழர்களின் அறவியல் சார் அறிவினை இலக்கியங்கள் வழி அறிவதற்கு ஏதுவாகின்றது.
- புள்ளினங்களின் இயல்பினை நுட்பமாக பதிவு செய்துள்ள முறைமையினை இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன.
- கழுகு இனம் சார்ந்த பறவைகள் இலக்கியங்கள் வழி வெளிகொணரப்பட்டுள்ளது.
- கழுகும், பருந்தும்ஒரேஇனத்தைச்சார்ந்தபறவையாகும்.
- உயிரினங்கள் சுற்றுச்சூழலுக்கு ஆற்றும் பாங்கானது அறியப்படுகின்றது.
- கழுகினங்களின் நுட்பமான தன்மையினை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது.

**அடிக்குறிப்பு**

1. https:\\ta.m.wikipedia.org\wik 02.02.2019
2. ஞா.தேவநேயன், முதல்தாய்மொழி (அ) தமிழாக்கவிளக்கம், பக்.227-230
3. வெற்றித்தமிழ்அகராதி,ப.87
4. பி.எல்.சாமி, சங்கஇலக்கியத்தில்புள்ளினவிளக்கம், ப.343
5. ஞா.வேதநேயன்,முதல்தாய்மொழி(அ)தமிழாக்கவிளக்கம்,ப.283

**துணைநூற்பட்டியல்**

- இளங்கண்ணனார்.வீ - வள்ளலாரும் உயிரினங்களும்,உலகத்தமிழ்க் கல்வி இயக்கம்,33, திருமலைநகர் இணைப்பு,பெருங்குடி,சென்னை- 96
- சாமி.பி.எல். - சங்க இலக்கியத்தில் புள்ளின விளக்கம், கழக வெளியீடு, திருநெல்வேலி.


http://Creativecommons.org//license/by/4.0/.